
Vol: 4 No.: 7
November 2026

Private Circulation

OBC VOICE





RE-EXAMINE INDRA SAWHNEY JUDGEMENT
PRIVATISATION AGAINST SOCIAL JUSTICE
TN PRIVATE UNIVERSITY BILL 2026
CONVERSION DOES NOT ERASE BACKWARDNESS
UNVEILING PORTRAITS - PERIYAR

AIOBC EMPLOYEES FEDERATION MET HON'BLE MEMBERS OF PARLIAMENT BELONGING TO DMK AND SUBMITTED MATTERS RELATING TO CASTE CENSUS (17.10.2026)



Hon'ble Members of Parliament: 1st row: 1. Tiruchi Siva 2-3. Kanimozhi Karunanidhi
2nd row: 4. T.K.S.Elangovan, Ex.M.P., Dr. Thamizhachi Thangapandian, A. Mani, S. Murasoli, S.R. Sivalingam and Arun Nehru, 5. Prof. J. Constandine Ravindran, 6. K.R.N. Rajesh Kumar
3rd row: 7. R. Girirajan, 8. Dr. Kalanidhi Veerasamy, 9. T.M. Selvaganapathy,
4th row: 10. S. Kalyanasundaram, 11. K.E. Prakash, 12. Paranthaman, Ex.M.L.A.

OBC VOICE
Private Circulation
Vol: 4 No: 7 November 2026

Editor:
G.Karunanidhi

Editorial Board:
Vaeyuru Tholibangan
Dr. Arvind Kumar
Ravindra Ram
T.Ravikumar
K.Chandran
G.Malarkodi

Published by:
G.Karunanidhi
C/o Union Bank OBC
Association, 139, Broadway,
Chenai 600108

Printed at:
Krishnaraj Printers
36, Devarajan Street
Royapettah
Chennai 600014
Tel:+91 044-28485938/37

Email:
empower.socialjustice
@gmail.com

Website:
empowertrust.org

The views expressed
in the articles
are not necessarily ours

THE 50% CEILING: A BARRIER TO SOCIAL JUSTICE?

Why Is Constitutional Flexibility Available for EWS but Restricted for OBCs, SCs and STs?

India's reservation debate confronts a fundamental question of constitutional consistency: **Why does the 50% reservation ceiling restrict enhanced quotas for historically disadvantaged communities, while 10% EWS reservation has been upheld even when total reservations exceed that limit?**

Recent judgments concerning Madhya Pradesh and Andhra Pradesh have brought this contradiction into sharp focus.

Two States, One Common Obstacle

On October 9, 2026, the Madhya Pradesh High Court struck down the State's 2019 law enhancing OBC reservation from 14% to 27%, holding that exceptional circumstances to exceed the 50% ceiling had not been established. The State Government subsequently approached the Supreme Court.

In Andhra Pradesh, the High Court struck down the enhanced 34% Backward Class reservation in local-body elections. The Supreme Court subsequently rejected the State's plea to restore the enhanced quota, according to the reports under consideration, citing concerns surrounding the justification for exceeding the prescribed ceiling.

These judgments reinforce the constraints imposed by the *Indra Sawhney v. Union of India* (1992) ruling, which generally limited reservations under Article 16(4) to 50%, while recognising exceptional circumstances.

Yet the Constitution itself does not expressly prescribe a universal 50% ceiling for every form of reservation. The limit emerged through judicial interpretation. Should a judicially evolved principle become an insurmountable barrier to addressing persistent social exclusion?

The EWS Exception Raises a Crucial Question

The 103rd Constitutional Amendment introduced Articles 15(6) and 16(6), enabling up to 10% reservation for Economically Weaker Sections outside the existing reservation categories. In *Janhit Abhiyan v. Union of India* (2022), a majority of the Supreme Court upheld the amendment, including the challenge concerning the 50% ceiling.

The legal distinction is clear: EWS reservation has a specific constitutional basis created by amendment, while OBC, SC and ST reservations operate under different constitutional provisions. The EWS judgment did not automatically remove the ceiling for other categories.

Nevertheless, the larger question cannot be ignored: **If constitutional amendment can accommodate EWS reservation beyond 50%, why should Parliament not examine a similar constitutional framework to ensure adequate representation for OBCs, SCs and STs?**

Parliament Must Break the Deadlock

Parliament must initiate a comprehensive review of the 50% ceiling, its exceptions and their consequences. OBC, SC and ST representatives, constitutional experts and State Governments must participate in this exercise. Reliable data must guide reforms, and any constitutional clarification or amendment must respect constitutional safeguards.

Equality Cannot Be Selective

The Madhya Pradesh and Andhra Pradesh judgments expose the constraints faced by backward communities seeking greater representation. The EWS judgment demonstrates that constitutional flexibility beyond 50% is possible through a specific amendment.

If flexibility is constitutionally possible for EWS reservation, the demand for adequate representation of OBCs, SCs and STs deserves an equally serious examination.

The 50% ceiling must not become an unquestionable barrier to social justice. Parliament must act to ensure that reservation policy reflects India's social realities and the Constitution's promise of equality, representation and dignity.■

நவம்பர் 16 (1992)

இடஒதுக்கீடு: 50% உச்சவரம்பும் சமூக நீதிக்கான போராட்டமும் – இந்திரா சாவ்னி தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டிய வரலாற்றுத் தேவை!

NOVEMBER 16 (1992)

RESERVATION AND CONSTITUTIONAL EQUALITY: RE-EXAMINING THE LEGACY OF THE INDRA SAWHNEY JUDGMENT



க.சரஸ்வதி

G.SARASWATHI

சமத்துவம் என்பது இந்திய அரசியலமைப்பின் முக்கிய வாக்குறுதிகளில் ஒன்றாகும். ஆனால், இந்தியா சுதந்திரம் பெற்றபோது, சமூகம் சமூக மற்றும் கல்வி ஏற்றத்தாழ்வுகளால் ஆழமாகப் பிளவுபட்டிருந்தது. இதனால், அனைவரையும் ஒரே மாதிரியாக நடத்துவதையே சமத்துவம் என்று அரசியலமைப்பு கருதவில்லை. முற்றிலும் மாறுபட்ட சமூக நிலைகளிலிருந்து தொடங்கியவர்களை ஒரே விதமாக நடத்தினால், ஏற்கெனவே உள்ள ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து நிலைத்திருக்கும். இதைச் சரிசெய்ய, வரலாற்று ரீதியாக பின்தங்கிய சமூகங்களுக்கு உதவும் வகையில் இட ஒதுக்கீடு போன்ற சிறப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள அரசியலமைப்பு அனுமதித்தது.

அனைவரையும் சமமாக நடத்துவதற்கும், கூடுதல் ஆதரவு தேவைப்படுவோருக்கு அதை வழங்குவதற்கும் இடையிலான இந்தச் சமநிலை, 1992ஆம் ஆண்டின் இந்திரா சாவ்னி எதிர் இந்திய ஒன்றியம் வழக்கில் முக்கியமான சட்டப் போராட்டமாக உருவெடுத்தது.

மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தி, சமூக மற்றும் கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) அரசுப் பணிகளில் 27% இடஒதுக்கீடு வழங்க ஒன்றிய அரசு முடிவு செய்தபோது இந்தப் பிரச்சினை தொடங்கியது.

1992 நவம்பர் 16ஆம் தேதி, இந்திய உச்ச நீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வு, இந்திரா சாவ்னி எதிர் இந்திய ஒன்றியம் (AIR 1993 SC 477) வழக்கில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது. இடஒதுக்கீடு தொடர்பான முக்கிய அரசியலமைப்பு தீர்ப்பாக இது அமைந்தது.

1953ஆம் ஆண்டில், அரசியலமைப்புச் சட்டத்தின் 340ஆம் பிரிவின் கீழ், காகா காலேல்கர் தலைமையில் முதல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையத்தை ஒன்றிய அரசு அமைத்தது. அந்த ஆணையம் 1955ஆம் ஆண்டு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. ஆனால், தலைவர் காகா காலேல்கர் மாறுபட்ட கருத்து குறிப்பை அளித்ததால், அரசு இந்த அறிக்கையை நிராகரித்தது. அடுத்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் பிரச்சினை தீர்க்கப் படாமல் இருந்தது. 1979ஆம் ஆண்டு, பி.பி. மண்டல் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையம் அமைக்கப்பட்டது.

மண்டல் ஆணையம் 1980ஆம் ஆண்டு தனது அறிக்கையை சமர்ப்பித்து, சமூக மற்றும் கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மத்திய அரசுப் பணிகளில் 27% இடஒதுக்கீடு வழங்க பரிந்துரைத்தது. அந்த அறிக்கை பத்து ஆண்டுகள்

Equality is one of the main promises of the Indian Constitution, but when India became independent, society was deeply divided by social and educational inequalities. Because of this, the Constitution didn't look at equality as simply treating everyone the exact same way. If you treat people who started from vastly different positions identically, you end up keeping the same inequalities alive. To fix this, the Constitution allowed the government to take special steps like reservations to help groups that were historically left behind.

This balance between treating everyone equally and giving extra support to those who need it led to a major clash in the case of Indra Sawhney v. Union of India (1992).

The conflict started when the Central Government decided to implement the recommendations of the Mandal Commission and set aside 27% of government jobs for Socially and Educationally Backward Classes (OBCs).

On 16th November 1992, a landmark 9-judge Constitution Bench of the Supreme Court of India delivered its judgment in Indra Sawhney v. Union of India (AIR 1993 SC 477). The judgment became a major constitutional decision on reservation.

In 1953, the Central Government appointed the First Backward Classes Commission under Article 340, led by Kaka Kalelkar. The commission submitted its report in 1955, but the government rejected it because the Chairperson Kaka Kalelkar gave a dissenting note. The issue remained unresolved for over two decades until 1979, when the government appointed the Second Backward Classes Commission under B.P. Mandal. The Mandal Commission submitted its report in 1980, recommending a 27% reservation in Central Government jobs for socially and educationally backward classes. Although the report sat unimplemented for ten years, the Central Government under the Prime Ministership of V.P.Singh

நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தது. இறுதியாக, பிரதமர் வி.பி. சிங் தலைமையிலான மத்திய அரசு, 1990 ஆகஸ்ட் மாதம் 27% இடஒதுக்கீடு வழங்குவதற்கான அலுவலகக் குறிப்பாணையை வெளியிட்டது. இதற்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்களும் கடுமையான சட்டச் சவால்களும் எழுந்தன; பல மனுக்கள் நேரடியாக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

அரசு வெளியிட்ட 27% இடஒதுக்கீடு ஆணையின் சட்டபூர்வ தன்மையை மட்டும் விசாரிப்பதற்கு பதிலாக, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டின் அடிப்படைக் கருத்துகளையும் கோட்பாடுகளையும் ஆராய்ந்து தீர்ப்பளிக்கும் பொறுப்பையும் உச்சநீதிமன்றம் எடுத்துக்கொண்டது.

இந்த வழக்கில் உச்சநீதிமன்றம் பல முக்கிய கேள்வி களுக்குப் பதிலளிக்க வேண்டியிருந்தது. முதலாவதாக, அரசியலமைப்புச் சட்டம் 16(4)ன் கீழான இடஒதுக்கீடு சம வாய்ப்புக்கான விதிக்கு விதி விலக்கா அல்லது சமத்துவத்தின் ஓர் அங்கமா என்பது ஆராயப்பட்டது. "பிற்படுத்தப்பட்ட வகுப்பு" என்பதன் பொருள் என்ன, அத்தகைய வகுப்பினரை அடையாளம் காண சாதியை அடிப்படையாகக் கொள்ளலாமா என்பதும் பரிசீலிக்கப் பட்டது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குள் பொருளாதார ரீதியாக வசதி பெற்ற மற்றும் சமூக ரீதியாக முன்னேறியவர்களை இடஒதுக்கீட்டுப் பலன்களிலிருந்து விலக்க வேண்டுமா என்பதும் முக்கியமான கேள்வியாக இருந்தது.

மேலும், மொத்த இட ஒதுக்கீடு 50%-ஐத் தாண்டலாமா, பதவி உயர்வுகளுக்கும் இட ஒதுக்கீடு வழங்கலாமா என்பதையும் நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியிருந்தது. இடஒதுக்கீடு வழங்க அரசுக்கு அரசியலமைப்புச் சட்டம் 16(4) மட்டுமே வழிவகுக்கிறதா, மண்டல் ஆணைய அறிக்கையை நடைமுறைப்படுத்திய 1990ஆம் ஆண்டின் அரசாணை அரசியலமைப்பின்படி செல்லத்தக்கதா என்பதையும் நீதிமன்றம் ஆய்வு செய்தது.

இரு தரப்பினரின் வாதங்கள்:

இரு தரப்பினரும் நீதிமன்றத்தில் தெளிவான வாதங்களை முன்வைத்தனர்.

அதிக அளவில் இட ஒதுக்கீடு வழங்குவது, மற்றவர்களுக்கு அரசியலமைப்பு வழங்கியுள்ள சம வாய்ப்புக்கான அடிப்படை உரிமையை பாதிக்கும் என்று மனுதாரர்கள் வாதிட்டனர். பிற்படுத்தப்பட்ட நிலையை வரையறுக்க சாதியை அடிப்படையாகக் கொள்வதும் தவறானதும் நியாயமற்றதும் என அவர்கள் வலியுறுத்தினர்.

மறுபுறம், நீண்ட காலமாக நிலவி வந்த வரலாற்று மற்றும் சமூக அநீதிகளை சரிசெய்ய இடஒதுக்கீடு அவசியம் என்று அரசு வாதிட்டது. சமூக நிலைகளில் பெரும் ஏற்றத் தாழ்வுகளுடன் வாழும் மக்களை ஒரே மாதிரியாக நடத்துவது உண்மையான நியாயமாகாது என்றும் அரசு சுட்டிக்காட்டியது.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு

1992 நவம்பர் 16ஆம் தேதி, உச்ச நீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வு இறுதித் தீர்ப்பை வழங்கியது. நீதிபதி பி.பி. ஜீவன் ரெட்டி முக்கியமாக எழுதிய இந்தத் தீர்ப்பு, இன்றளவும் இந்தியாவில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை வழிநடத்தும் மூன்று முக்கியக் கோட்பாடுகளை முன்வைத்தது:

1. **27% இடஒதுக்கீடு செல்லத்தக்கது:** ஒன்றிய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இட ஒதுக்கீடு வழங்குவது அரசியலமைப்புக்கு உட்பட்டது என்று நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

2. **கிரீமிலேயர்' நீக்கம்:** பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குள் பொருளாதார ரீதியாக வசதி பெற்றும் சமூக ரீதியாக முன்னேறியும் உள்ளவர்களுக்கு இட ஒதுக்கீடு பயன்கள்

finally issued an Office Memorandum in August 1990 to grant the 27% reservation. This decision sparked widespread public protests and intense legal challenges, leading to numerous petitions filed directly in the Supreme Court.

Instead of restricting itself to adjudicating the 27% reservation Government Order issued by the Government, the Supreme Court took it upon itself to examine and pronounce a verdict on the very concept and fundamental principles of reservation for Backward Classes.

The Supreme Court had to answer several key questions in this case. First, it had to decide if reservation under Article 16(4) was just an exception or a real part of equal opportunity. The Court also needed to define what a "backward class" actually means and whether caste could be used to identify these groups.

Another important question was whether wealthier and advanced members of a backward group should be excluded from getting reservation benefits.

Additionally, the Court had to decide if total reservations could go above 50% and whether reservation should apply to job promotions. Finally, it had to examine if Article 16(4) was the only way for the government to give reservations and whether the government's 1990 order implementing the Mandal report was legally valid under the Constitution.

Arguments of Both Sides:

Both sides presented clear arguments before the Court:

The petitioners argued that offering too many reserved seats would destroy the fundamental right to equal opportunity for everyone else, and they insisted that using caste as the basis to define backwardness was both wrong and unfair.

On the other hand, the government argued that reservations were essential to fix long-standing historical and social injustices, pointing out that treating people identically is not truly fair when they start from vastly unequal social conditions.

The Supreme Court's Decision

On November 16, 1992, a nine-judge Bench of the Supreme Court gave its final decision, written mainly by Justice B.P. Jeevan Reddy and set down three simple rules that still guide India today:

1. **27% Reservation is Valid:** The Court agreed that reserving 27% of central government jobs for backward classes was constitutional.
2. **The "Creamy Layer" Must Be Filtered Out:** Wealthier and socially advanced individuals within backward classes cannot claim

கிடைக்கக் கூடாது என்று நீதிமன்றம் கூறியது. இதன் மூலம் உண்மையில் உதவி தேவைப்படுவோருக்கு இட ஒதுக்கீடு பயன்கள் சென்றடையும் எனக் கருதப்பட்டது.

3. **50% உச்சவரம்பு:** அனைவருக்கும் திறந்த போட்டியில் நியாயம் நிலவுவதை உறுதிசெய்ய, மொத்த இடஒதுக்கீடு பொதுவாக 50%-ஐத் தாண்டக் கூடாது என்று நீதிமன்றம் கூறியது.

சுருக்கமாகச் சொல்வதானால், நியாயமான வரம்புகளுக்குள் செயல்படுத்தப்படும் போது, இட ஒதுக்கீடு சமத்துவத்திற்கு எதிரானதல்ல; உண்மையான சமத்துவத்தை உருவாக்கு வதற்கான ஒரு கருவி என்று நீதிமன்றம் தீர்மானித்தது.

இந்தத் தீர்ப்பில் இருந்து எழும் முக்கியமான பிரச்சினைகள் குறித்து, கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் உரிமைகளுக்காக போராடி, சமூக நீதியை முன்னெடுத்து வரும் அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பின் கருத்துக்களை இங்கு மேற்கோள் காட்டுவது பொருத்தமானதாக இருக்கும்.

50% இடஒதுக்கீடு உச்சவரம்பை மறுபரிசீலனை செய்தல்

மாநிலங்களின் உண்மையான மக்கள் தொகை அமைப்பு மற்றும் சமூகச் சூழலுக்கு ஏற்ப இடஒதுக்கீடு விகிதங்களை நிர்ணயிக்க மாநிலங்களுக்கு அரசியலமைப்புச் சட்ட அதிகாரம் இருக்க வேண்டும் என்று கூட்டமைப்பு வலியுறுத்துகிறது. மக்கள்தொகையில் கணிசமான பங்கைக் கொண்ட சமூகங்களுக்கான நேர்மறை நடவடிக்கைகளை, 1992ஆம் ஆண்டின் இந்திரா சாவ்னி தீர்ப்பில் உச்சநீதிமன்றம் விதித்த 50% உச்சவரம்பு தேவையற்ற வகையில் கட்டுப்படுத்துகிறது என்பது கூட்டமைப்பின் கருத்தாகும். மாநிலங்கள் தங்களின் சமூக யதார்த்தங்களுக்கு ஏற்ப பொருத்தமான இடஒதுக்கீடு விகிதங்களை நிர்ணயிக்க வழிவகுக்கும் அரசியலமைப்பு திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கூட்டமைப்பு ஒன்றியஅரசிடம் பல முறை மனுக்கள் அளித்துள்ளது. இதற்காக, சட்ட ரீதியாக பாதுகாக்கப்பட்ட 69% இடஒதுக்கீடு முறையை கொண்ட தமிழ்நாடு மாதிரியையும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

கிரீமிலேயர் கருத்தை ஒழித்தல்

ஓபிசி பிரிவினருக்கு விதிக்கப்படும் கிரீமிலேயர் அளவுகோல்களையும், குறிப்பாகச் சம்பளம் மற்றும் வேளாண் வருமானத்தைக் கணக்கில் சேர்ப்பதையும் கடுமையான பணவரம்புகளைப் பயன்படுத்துவதையும் கூட்டமைப்பு வலுவாக எதிர்க்கிறது. இத்தகைய அளவுகோல்கள், தகுதியுள்ள ஓபிசி விண்ணப்பதாரர்கள் பொதுத்துறை வேலைவாய்ப்புகளையும் உயர்கல்வி வாய்ப்புகளையும் பெறுவதிலிருந்து அநியாயமாக விலக்கப்படுவதற்குக் காரணமாகின்றன; இதனால் அய். அய்.டிக்கள் மற்றும் பொதுத்துறை வங்கிகள் உள்ளிட்ட நிறுவனங்களில் நிரப்பப்படாத பின்னடைவு காலியிடங்கள் அதிகரிக்கின்றன என்பது கூட்டமைப்பின் வாதமாகும். ஓபிசிகளுக்கான கிரீமிலேயர் கருத்தை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்று பிரதமருக்கும் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்திற்கும் அளித்த மனுக்களில் கூட்டமைப்பு கோரியுள்ளது.

இடஒதுக்கீடு வரம்புகள் குறித்த விவாதம், அரசியலமைப்புச் சமத்துவம் மற்றும் உண்மையான சமூக நீதி ஆகியவற்றின் மய்யத்தையே தொடுகிறது. வரலாற்று ரீதியாக பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் முன்னேற்றத்தைத் தடுக்கும் கடுமையான உச்ச வரம்புகள் அல்லது விலக்கல் அளவுகோல்களின் மூலம் உண்மையான சமத்துவத்தை அடைய முடியாது. அரசியலமைப்பு வழங்கியுள்ள பாதுகாப்புகள், ஓபிசிக்களுக்கு நியாயமான பிரதிநிதித்துவத்தையும் உண்மையான வாய்ப்புகளையும் வழங்குவதை உறுதி செய்ய, இடஒதுக்கீட்டுக் கொள்கைகளை அர்த்தமுள்ள வகையில் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதே சமூக நீதிக்கான அடிப்படைக் கோரிக்கையாகும்.

(கட்டுரையாளர் க. சரஸ்வதி, பொருளாளர், தமிழ்நாடு யூனியன் பாங்க் ஆப் இந்தியா பிற்படுத்தப்பட்ட வகுப்பு பணியாளர் நல சங்கம்)

reservation benefits. This ensures the help reaches those who actually need it.

3. **50% Limit:** Total reservations should generally not go above 50%, keeping open competition fair for everyone else.

In short, the Court decided that reservation isn't against equality—it's a tool to build real equality, as long as it stays within reasonable limits.

It would be pertinent to quote the views of the AIOBC Employees Federation, which has championed social justice for Backward Classes and spearheaded the movement for their rights for nearly three decades, on these crucial issues arising from the judgment.

Reconsidering the 50% Reservation Cap

The AIOBC Employees Federation strongly advocates that States must have the constitutional authority to determine reservation quotas based on their actual demographic composition and social realities. The 50% ceiling laid down in the Supreme Court's 1992 Indra Sawhney judgment, the Federation argues, unduly restricts affirmative action for communities constituting a substantial share of the population. Through repeated memoranda to the Union Government, the Federation has demanded constitutional amendments empowering States to determine appropriate quotas, drawing attention to Tamil Nadu's protected 69% reservation model.

Abolition of the Creamy Layer Concept

The Federation also strongly opposes the creamy layer criteria imposed on OBCs, particularly the inclusion of salary and agricultural income and the application of rigid monetary thresholds. It argues that these criteria unfairly exclude eligible OBC candidates from public-sector employment and higher education, contributing to unfilled backlog vacancies in institutions, including IITs and public sector banks. Through representations to the Prime Minister and the Ministry of Social Justice and Empowerment, the Federation has demanded the **complete abolition of the creamy layer concept for OBCs.**

The debate over reservation limits goes to the heart of constitutional equality and substantive social justice. Genuine equality cannot be achieved by rigid ceilings or exclusionary criteria that restrict the advancement of historically disadvantaged communities. Social justice demands a meaningful reassessment of reservation policies to ensure that constitutional safeguards translate into equitable representation and real opportunities for OBCs.

(The writer G.Saraswathi is Treasurer, Union Bank of India Backward Classes Employees Welfare Association, Tamil Nadu)

40 questions on caste, jobs in Census 2027

NABINDER BOMMALA | DC
HYDERABAD, OCT. 14

The second phase of Census 2027, involving population enumeration, will begin in January 2027, with residents having the option of submitting their details online through a self-enumeration facility before enumerators undertake house-to-house visits.

The Union government has notified 40 questions for population enumeration, covering caste, religion, education, occupation, economic activity, migration and other socio-economic details of household members.

While the first phase covers housing conditions and household details, including the head of the family and type of house, the second phase will collect information on individual family members.

The questionnaire seeks Aadhaar number, voter ID number and Indian passport number.

■ Page 2: Expect questions on occcupation, industry

Census: Expect questions on occupation

FROM PAGE 1

The questions include the highest educational qualification attained, occupation, nature of industry, trade or service, number of children, total number of bank accounts, place of Covid-19 vaccination, previous place of residence and reasons for migration, wherever applicable, besides information on the availability of a driving licence.

"There is perception that Population Enumeration (PE) is a process to collect caste details, but this task is about understating socio-economic status and caste is only one among the entire component," said an official.

A training programme for charge clerks and technical assistants from Circles 1 to 30 and the Cantonment Board under the GHMC was held on Wednesday.

Telangana director of census operations Bharathi Hollikeri, GHMC commissioner R.V. Karnan and others briefed the staff assigned to population enumeration on the procedures and requirements for Census 2027.


The training covered the formation of additional enumeration blocks, preparation of abridged house lists and use of the Census Management and Monitoring System (CMMS) portal, including its various modules.

Participants were trained in the use of the population enumeration mobile app by enumerators and supervisors for collecting and recording responses to the 40 questions.



CENSUS 2027

PEOPLE
DATA
STRONGER
SOCIAL JUSTICE



Census 2027: A Call for Comprehensive Caste Enumeration

The *Deccan Chronicle* reports (14 October 2026) that Census 2027 will cover 40 questions on caste, education, occupation, economic activity, migration and socio-economic conditions. While caste enumeration is a significant step towards evidence-based social justice, **the AIOBC Employees Federation demands that every enumerator be equipped with comprehensive, officially authenticated caste lists covering OBC, BC, MBC and other communities,** rather than leaving caste identification entirely to the public. This is essential to prevent omissions, inconsistencies and misclassification and to ensure scientific, transparent and credible caste-wise data for equitable reservation, representation and resource allocation.

Editorial Board



தமிழ்நாடு அரசின் தனியார்மயம்! இடஒதுக்கீட்டை அழித்திடும் அபாயம்!!

PRIVATISATION BY THE TAMIL NADU GOVERNMENT! A GRAVE THREAT TO RESERVATION!!

- முனைவர் **க.அன்பழகன்**

- Dr. **K. Anbazhagan**

தமிழ்நாடு இடஒதுக்கீட்டுக் கொள்கைக்குத் தாயகம் ஆகும். "சென்னை ராஜதானி" என்னும் பெயரில் தமிழ்நாடு உட்பட நான்கு மாநிலங்கள் இணைந்து இருந்த காலத்தில் 1928இல் முதல் "வகுப்புவாரி உரிமை" எனும் இடஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டது. அன்றைய ஆட்சி நீதிக்கட்சியின் ஆட்சி. அதற்குமுன் இடஒதுக்கீடு சிந்திக்கப்பட்டும் செயலாக்கம் இன்றியும் இருந்து வந்தது.

ஆங்கிலேயர் ஆட்சியில் இடஒதுக்கீட்டை (சமூகநீதி) தீவிரமாகச் செயலாக்கம் செய்திடும் சில செயல்பாடுகளும் நடந்துள்ள நிலையில், நீதிக்கட்சியே அரசின் கொள்கைத் திட்டமாக்கி அரசாணை மூலம் முதன்முதலில் நிறைவேற்றிய பெருமைக்குரியது. பார்ப்பனரல்லாதாரின் சமூகநீதிக்காக – இடஒதுக்கீட்டுக்காக உருவானதே நீதிக்கட்சி.

திராவிடர் இனத்தாரின் சுயமரியாதையைக் காக்கத் தந்தை பெரியார் உருவாக்கிய சுயமரியாதை இயக்கம், பார்ப்பனரல்லாதார் அரசின் கல்வி, வேலைவாய்ப்புகளில் உரிய விகிதாசாரப் பிரதிநிதித்துவம் பெற்றிடப் பாடுபட்ட நிலையில், நீதிக்கட்சி பெரியாரின் தலைமையில் இயங்கத் தொடங்கி, திராவிடர் கழகம் என்று 1944இல் பெயரிடப்பட்டு சமூகநீதிக்காகத் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

திராவிடர் கழகத்திலிருந்து அரசியல் கட்சியாகத் தோன்றிய தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய கட்சிகள் தமிழ்நாட்டின் இடஒதுக்கீட்டைப் பெரியார் சமூகநீதிக் கொள்கைப்படி உயர்த்தின. தேவைப்படின் போராட்டத்தின் மூலமும் இடஒதுக்கீட்டைத் தமிழ்நாட்டில் பாதுகாத்திடவும் உயர்த்திடவும் திராவிடர் கழகம் பாடுபட்டு வருகிறது.

இந்நிலையில், இன்றைய தமிழ்நாடு மாநிலத்தின் இடஒதுக்கீடு 69 விழுக்காடு என்ற அளவில் உயர்த்தப்பட்டு – சட்டப் பாதுகாப்போடு, நீதிமன்றத் தலையீடுகளுக்கு இடமின்றி, இந்தியாவிலேயே

Tamil Nadu is the birthplace of reservation policy. In 1928, when four regions—including present-day Tamil Nadu—were part of the Madras Presidency, the first order introducing "communal representation" (reservation) was issued. The Justice Party was in power at the time. Although reservation had been discussed earlier, it had not been implemented.

During British rule, some steps were taken to advance reservation as a means of social justice. However, the Justice Party deserves credit for making it an official government policy and implementing it for the first time through a government order. The party was formed to secure social justice and reservation for non-Brahmin communities.

The Self-Respect Movement, founded by Thanthai Periyar to safeguard the dignity and self-respect of the Dravidian people, worked to secure proportionate representation for non-Brahmins in education and government employment. The Justice Party began functioning under Periyar's leadership and was renamed the Dravidar Kazhagam in 1944. It has continued to champion social justice.

The DMK and AIADMK, which emerged as political parties from the Dravidar Kazhagam, increased reservation in Tamil Nadu in keeping with Periyar's social-justice principles. The Dravidar Kazhagam has continued to work to protect and expand reservation, taking to the streets when necessary.

Today, Tamil Nadu's reservation level has been raised to 69 per cent and is protected by law. The State stands at the forefront in India in terms of the proportion of reservation provided.

அதிக விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்படும் மாநிலமாக முதலிடத்தில் உள்ளது. இது பெரியார் வழியில் திராவிடர் இயக்கத்தின் சாதனை என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை. இவ்வெற்றிக்குத் திராவிடர் கழகத் தலைவர் டாக்டர் கி. வீரமணி மூளையாகச் செயல்பட்டார் என்பது வரலாற்று முக்கியத்துவம் மிக்க செய்தியாகும்.

இன்றைய காலகட்டத்தில் இந்திய ஒன்றிய அரசு தனியார்மயத்தை மிக வேகமாகச் செய்தும் செய்யவும் உள்ள நிலையில், அது சமூகநீதிக்குச் சவாலான ஒன்றாக உள்ளது. அப்படி நடந்தாலும் தனியார் துறையிலும் இடஒதுக்கீடு வேண்டும் என்று திராவிடர் கழகமும் ஒத்த கருத்துள்ள சமூகநீதி காக்கும் கட்சிகளும் குரல் கொடுத்து வருகின்றன. 'நெய்வேலி லிக்னைட்' போன்ற மின் உற்பத்தி நிலையங்களைத் தனியாருக்கு தாரைவார்க்கத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்துப் போராடி பலமுறை தடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு தனியார்மயத்தைக் கொண்டுவர முயற்சிப்பதை எதிர்ப்பதற்கான முதற்காரணமே இடஒதுக்கீட்டுக்கு ஆபத்து என்பதாகும். தனியார்மயமானால் பழங்குடியினர், தாழ்த்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று சமூகநீதி மறுக்கப்பட்ட சமுதாயத்தின் ஜாதிக் கொடுமைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நீதி கிடைக்க வாய்ப்பில்லை. இன்றைய சட்டப்படி இடஒதுக்கீடு அரசுப் பணிக்கும் கல்வி கற்கும் வாய்ப்புக்கும் பொருந்தும். தனியார்மயமானால் சமூகநீதிக்கான இடஒதுக்கீடு முற்றிலும் ஒழிக்கப்படும்.

இந்நிலையில், இந்திய ஒன்றிய அரசு செய்துவரும் – சமூகநீதிக்குப் புதைகுழி தோண்டிடும் 'தனியார்மயம்' என்கிற பேராபத்தினை நடைமுறைப்படுத்திடத் தற்போதைய தமிழ்நாடு அரசு பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு, அதன் முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் தொடங்கியுள்ள செயல் பெரும் கவலைக்குரியதாகும்.

தமிழ்நாட்டின் பெருநகரங்களில் துப்புரவுத் தொழில் செய்யும் துப்புரவுத் தொழிலாளர்களைத் தனியார் ஒப்பந்தக்காரர்கள் மூலம் டெண்டர் முறையில் ஒப்படைத்துத் தனியார் முதலாளிகளின் அடிமைகளாக்கும் போக்கு சமூகநீதிக்குச் செய்யும் உச்சபட்ச அநீதியாகும். துப்புரவுத் தொழிலாளர்கள் இன்று அரசு ஊழியர்களாக ஆக்கப்பட வேண்டும் என்று, சாலையில் கிடக்கும் குப்பைமீது அமர்ந்து – மனிதக் குப்பையாக – துப்புரவுத் தொழிலாளர்கள் மனித உரிமைக்கும் சமூகநீதிக்கும் போராடும் அவலம் சமூகநீதியின் பிறப்பிடமான தமிழ்நாட்டில் நடக்கலாமா? பெரியார் மண்ணிற்கு இது பெருமையா?

போக்குவரத்துத் துறை

தமிழ்நாட்டின் போக்குவரத்துத் துறையில் பணியாற்றிடும் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களைத்

This is undeniably an achievement of the Dravidian movement, following Periyar's path. The historically significant role played by Dr. K. Veeramani, President of the Dravidar Kazhagam, in this achievement must also be acknowledged.

At a time when the Union Government is rapidly pursuing—and planning further—privatisation, this policy poses a challenge to social justice. The Dravidar Kazhagam and other parties committed to social justice have therefore demanded reservation in the private sector as well. They have repeatedly resisted attempts by the Union Government to hand over power-generation facilities such as Neyveli Lignite to private interests.

The foremost reason for opposing the Union Government's drive towards privatisation is the danger it poses to reservation. If public services and institutions are privatised, communities that have historically been denied social justice—including Scheduled Tribes, Scheduled Castes and Most Backward Classes—may be deprived of opportunities to which they are entitled. Under the present framework, reservation applies to government employment and educational opportunities. Privatisation would effectively eliminate reservation as a mechanism for social justice in the affected sectors.

Against this background, it is deeply concerning that the present Tamil Nadu government, led by the Tamilaga Vettri Kazhagam (TVK), and its Chief Minister, Joseph Vijay, have initiated steps that will give grave threat of privatisation pursued by the BJP-led Union Government—a policy described here as digging a grave for social justice.

SANITATION WORKERS

In major cities across Tamil Nadu, sanitation work is being handed over through tenders to private contractors, placing sanitation workers under private employers. This is an extreme injustice to social justice. Sanitation workers are demanding that they be made government employees. In the birthplace of social justice, Tamil Nadu, workers are being driven to sit on heaps of garbage—treated as though they themselves were human refuse—in their struggle for human rights and social justice. Is this acceptable in Periyar's land? Is it something to be proud of?

TRANSPORT DEPARTMENT

A contract has reportedly been entered into with a private company named "Avantika", based in Uttar

தேர்ந்தெடுப்பதற்கு உத்தரப்பிரதேசத்து 'அவந்திகா' என்ற ஒரு தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தமாகிவிட்டது. தமிழ்நாட்டில் போக்கு வரத்துத் துறைப் பேருந்துகளுக்கு ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களைத் தேர்ந்தெடுப்பது மட்டுமல்லாமல், உத்தரப்பிரதேசத்துக்காரர்களையும் அப்பணிக்குத் தேர்ந்தெடுக்கும் பேராபத்தும் நடைபெறப் போகிறது. இடஒதுக்கீடும் போய், வெளிமாநிலத்தாருக்கு வேலைகளெல்லாம் கொள்ளைபோகும் கொடுமையைத் தனியார் மயத்தால் தமிழ்நாடு சந்திக்கப் போகிறது.

மின்சாரத் துறை

தூத்துக்குடி – எண்ணூர் அனல்மின் நிலையங்கள் தனியார்மயமாகும் ஆபத்து உள்ளது. வீடுகளில் மின் கட்டணக் கணக்கெடுப்பு செய்யும் பணி தனியாரிடம் ஒப்படைக்கப்படும் என்பது அதிர்ச்சி தரும் செய்தி. இதற்கான செயல்பாடுகள் இரண்டு மாதங்களாக நடைபெறத் தொடங்கிவிட்டன. மின்சாரத் துறைப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கும் திட்டம் மின்சாரத் தாக்குதலைவிடக் கொடுமையானது.

பல்கலைக்கழகங்கள்

பல்கலைக்கழகங்களைத் தனியார் தொடங்கிட 100 ஏக்கர் நிலம் தேவை என்பதை 12 ஏக்கர் போதும் என்று குறைக்கப்பட்டுவிட்டது. தனியார் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இதன் மூலம் சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்படுகிறது.

விமான நிலையங்கள்

விமான நிலையங்களைத் தனியாருக்குத் தாரைவார்க்க ஒரு மாதத்திற்கு முன்பே தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஜோசப் விஜய் ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதிவிட்டார். விமான நிலையங்கள் வந்தால் அதானி – அம்பானி – டாடா போன்ற பணக்காரத் திமிங்கலங்களுக்குக் கொண்டாட்டம்தான்.

பார்ப்பனரல்லாதார் சமூகநீதி பெற்றிட உருவாக்கப்பட்ட இடஒதுக்கீட்டுக் கொள்கையை முற்றிலும் நீர்த்துப்போகச் செய்யக் கொண்டு வரப்படும் சதித்திட்டமே தனியார்மயம். இதுவரை ஒன்றிய அரசு செய்து வருவதை அதன் வழி நடக்கும் தமிழ்நாடு அரசும் செய்யத் துணிந்துவிட்டது.

தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தும் தனியார்மயம், இருக்கின்ற இடஒதுக்கீட்டை அழித்திடும் பெரும் அபாயம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும் – ஒவ்வொருவருக்கும் உணர்த்த வேண்டும் – சமூகநீதி சாகடிக்கப்படாமல் காத்திடப் போர்க்குரல் கொடுப்போம். எதிர்காலச் சந்ததிகளுக்கு சமூகநீதியை மீட்டுக் கொடுப்போம்.

(கட்டுரையாளர் – மாநில கிராமப் பிரச்சார குழு அமைப்பாளர், திராவிடர் கழகம்)

Pradesh, to recruit drivers and conductors for Tamil Nadu's transport sector. This arrangement may not only outsource recruitment for State transport buses but could also open the way for candidates from Uttar Pradesh to be selected for these jobs. The privatisation could erode reservation and allow jobs to be taken away from local people in favour of applicants from other States.

ELECTRICITY DEPARTMENT

The thermal power stations at Thoothukudi and Ennore face the risk of privatisation. It is also shocking that the task of reading household electricity meters is reportedly to be handed over to private entities. Preparatory steps for this have allegedly been under way for two months. The proposal to recruit electricity-sector workers on a contract basis is more damaging than an electric shock.

UNIVERSITIES

The minimum land requirement for establishing private universities has reportedly been reduced from 100 acres to just 12 acres. This amounts to rolling out the red carpet for private colleges and universities.

AIRPORTS

A month ago, Tamil Nadu Chief Minister Joseph Vijay reportedly wrote to the Union Government to hand over airports to private operators. Such a move would primarily benefit powerful corporate groups such as Adani, Ambani and Tata.

PRIVATISATION: A THREAT TO SOCIAL JUSTICE

Privatisation is portrayed as a calculated plan to dilute and ultimately undermine the reservation policy created to secure social justice for non-Brahmin communities. The author contends that the Tamil Nadu Government, following the path of the Union government, has also become willing to pursue this course.

